வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4536/அ3/2024, நாள், 13.11.2024

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – வேலூர் மாவட்டம் – பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்களைக் கொண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின்கீழ் உள்ள போதக காப்பாளர்/காப்பாளினி மற்றும் இடைநிலை காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களை நிரப்புதல் – விருப்பமுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் கோருதல் – தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.072841/சி3/இ2/2024, நாள்.07.11.2024.

---

தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழுள்ள 1351 விடுதிகளில் காலியாகவுள்ள 497 பட்டதாரி காப்பாளர்/காப்பாளினி மற்றும் இடைநிலை காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களில் பணிபுரிய பள்ளிக்கல்வித் துறையின்கீழ் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியைகள் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள்/ஆசிரியைகளில் விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் வரவேற்கப்படுகிறது.

மேற்காணும் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ள பட்டதாரி/இடைநிலை ஆசிரியர்கள் பள்ளிக்கல்வித் துறையிலிருந்து தடையின்மை சான்று பெற கருத்துருக்களை நாளை மாலை 03.00 மணிக்குள் பட்டதாரி ஆசிரியர்கள் சார்ந்த கருத்துருக்களை இவ்வலுவலக அ3 பிரிவிலும், இடைநிலை ஆசிரியர்கள் சார்ந்த கருத்துருக்களை இவ்வலுவலக ஆ2 பிரிவிலும் தனித்தனியாக சமர்ப்பிக்குமாறும், எவரும் விருப்பம் தெரிவிக்கவில்லையெனில் இன்மை அறிக்கை தவறாமல் சமர்ப்பிக்குமாறும் அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிகள்

| வ. எண் | பணிவிவரம் | கல்வித் தகுதி |
|---|---|---|
| 1 | இடைநிலை காப்பாளர்/காப்பாளினி | இடைநிலை ஆசிரியர் பட்டயப் படிப்பு (D.T.Ed.) |
| 2 | போதக காப்பாளர்/காப்பாளினி | இளங்கலை கல்வியியல் (B.Ed with any Degree) |

இணைப்பு – விருப்பப் படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு/நகரவை/உயர்/மேல்நிலைப்
பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.